கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 5 - ஒலி 39 | 25-09-2022





# ஆங்காரமும், அகங்காரமும் இருக்கும் இடத்தில்

# தலையங்கம்

# புத்திசாலிகள் அன்பாயிருப்பர்



அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

இன்றைய உலகம் போகின்ற பாதை மன ரணங்களாலும், இரத்தக் கறைகளாலும், மரண வாடையாலும் நிறைந்ததாகத்தான் இருக்கின்றது.

அன்பு, அறம், பண்பாடு, கலாச்சாரத்தின் கூறுகள் அனைத்தும் மதிப்பிழந்துகொண்டு இருக்கின்றது. அவைகளெல்லாம் இந்தக் காலத்திற்கு ஏற்றவையாக இல்லை. அவைகளைக் கடைப்பிடிப்பவர்கள் பழமைவாதிகள் என்ற பெயரைத்தான் தாங்கி நிற்கவேண்டும் என்ற சூழல்தான் நிலவுகின்றது.

சுயநலமும், பகையும், பழிக்குப்பழி வாங்கும் உணர்வும், சூழ்ச்சிகள், செய்வினைகள், குழிபறிக்கும் திறமைகள், காட்டிக் கொடுத்தல், சந்தர்ப்பவாதம், தீவிரவாதம் போன்றவைகளே உலகை ஆளுகின்றன.

பொறுத்தது போதும் பொங்கி எழு, எதற்கும் ஒரு எல்லை உண்டு, என்ற மனநிலைக்கே பொறுமைசாலிகளும், நல்லவர்களும் தள்ளப்பட்டு,தங்கள் குணத்தை மாற்றிக் கொள்ளும் நிலை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

தீமையிடம் உலகம் சரணடைந்து பல காலம் ஆகிப்போச்சு. எங்கெங்கிலும் தீமை தலைவிரித்தாடுகின்றது. நல்லதுக்குக் காலம் இல்லை. நரக அசுரம் வேறுவேறு வேடம் பூண்டு, ஆட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

நரகாசுரனும், தன் கதை முடிந்துவிடவில்லை, தனக்குப் பதிலாக மக்களே அந்தப் பணிகளைச் செய்வதால், நல்லவர்களோடு சேர்ந்து தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றான் அதுதான் வேடிக்கை.

இன்று உலகில் வெறுப்பு, சுயநலம் பல வடிவங்களில் இன்றும் உயிர்ப்போடுதான் இருந்து கொண்டிருக்கின்றன.

அலைபேசி வந்தபிறகு, அனைவரும் தனித்தனித் தீவாக வாழும் இந்தக் காலத்தில் அடுத்தவர் நலன் மறந்துபோய்விட்டது. யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. அலைபேசிப் பித்துதான் இன்றைய நவீன நோய். அது குடும்பங்களை சீர்குலைத்துள்ளது.

அவற்றுக்கு எதிராக அறச் சினமும், அறப்போரும் மற்றொருபும் நடந்துகொண்டேதான் இருக்கின்றது.

அன்புக்கும் பகைக்கும் இடையே நடக்கும் இந்தப் போரில் இறுதியில் வெற்றிபெறப்போவது நன்மைதான். ஆனால், தீமையின் கொட்டம் அப்போதும் அடங்கித்தான் இருக்கும். ஆனால் அதே ஆத்திரத்தோடு வாய்ப்புக்காகக் காத்திருக்கும்...எத்தனை யுகமானாலும். ஜென்மப் புத்தி செருப்புல அடிச்சாலும் மாறாதல்லவா? உயிர்ப்பு நன்மைக்கு மட்டுமே சொந்தமானது. தீமைக்கு எப்போதும் உயிர்ப்பு கிடைக்காது.

அதுபோல மனிதனுக்கு எப்போதும் நல்வாய்ப்பு காத்திருக்கும். அதுதான் இறை இரக்கத்தின் கொடை. மீட்புப் பெறத் தகுதியானவர்களுக்கு மனமாற்றத்திற்கான இறுதியில் வாய்ப்பு தாராளமாகக் கொடுக்கப்படும்.

ஆனால் பிறரை அழித்தவர்கள், மாபதகங்களை ரசித்து, மகிழ்ச்சியோடு செய்தவர்கள். தங்களுக்கான நரகத்தை உருவாக்கிக் கொள்வார்கள். இறைவனின் இரக்கத்தை இறுதியிலும் உதாசீணப்படுத்துவார்கள். அதன் மதிப்பை அவர்களால் அறிந்து கொள்ளவே முடியாது. யூதாஸைப்போல.

தீயவர்கள் இறுதியில்தான் திருந்துவார்கள். அதுவும், பட்டு, கெட்டுத்தான் திருந்துவார்கள். அதுவே தீமையான பாதையின் முடிவு.

தீமையும் தீய மக்களும் ஒருபுறம் அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருந்தாலும், மறுபுறம், நன்மையும், நல்லவர்களும் இறைவனோடு இணைந்து தீமைக்கெதிராக போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அறவழிப்போராட்டம் அமைதியாகத்தான் நடைபெறும். ஆனால், உறுதியான வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையோடு.

இதைப் புரிந்துகொள்வதே நல்வழிப் பாதையைத் திறந்துவிடும்.

ஓர் ஊரில் இரண்டு கிறிஸ்தவக் குடும்பங்கள் அருகருகே வசித்து வந்தார்கள். கிட்ட இருந்தால் முட்டப்பகை என்று சொல்வார்கள் இல்லையா? அதுபோல இரண்டு குடும்பங்களுக்கு இடையே கடுமையான பகை.

இந்த சமயத்தில் ஒரு வீட்டில் உள்ள ஒரு பெண்ணுக்கு வரன் பார்க்க ஆரம்பித்தார்கள். பல பேர் அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு, போய் போன்ல சம்மதத்தைத் தெரிவிக்கின்றோம் என்று சொன்னார்கள். ஆனால் யாருமே கூப்பிடவும் இல்லை, சம்மதமும் தெரிவிக்கவில்லை. அதனால் அந்தப் பெண்ணுக்கு எந்த வரனும் அமையவில்லை. அவளுக்கு வயதும் ஆகிக்கொண்டே போனது. அதற்குக் காரணம் இவர்களின் பக்கத்துவீட்டுகாரப் பெண்தான். அவள்தான் அந்தப் பெண்ணை பார்க்க வந்த அனைத்து மாப்பிள்ளை வீட்டாரையும் தொடர்பு கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றி தப்புத்தப்பாக சொன்னதால் அவர்கள் அனைவரும் அவளை நிராகரித்துவிட்டார்கள்.

அந்தக் குடும்பத்தைப் பழிவாங்கியதில் அந்த வீட்டுக்காரப் பெண்ணுக்கு மிகவும் சந்தோஷம். ஆனால், அவள் செய்த தீய செயல், அவளின் குடும்பத்துக்கே பாதகமாய் அமைத்துவிட்டது. அவளின் கணவன் நோயினால் படுத்த படுக்கையாகிவிட்டார். அவளின் ஒரே மகனுக்கு திடீரென வேலை போய்விட்டது. வீடுகட்ட வாங்கிய லோனை அடைக்க முடியவில்லை. மாதத் தவணையும் சரியாகக் கட்ட முடியாததால், வங்கிக்காரர்களின் தொல்லையும் அதிகமானது. வீட்டில் நிம்மதியில்லை. இருள்படர்ந்த வீடாய் பாடாய்ப் பட்டது.

அவள், பக்கத்துவீட்டுப் பெண்ணுக்குச் செய்த துரோகம்தான், பாவச் செயல்தான், தனது கெடுமதிதான் தன் குடும்பத்துக்குக் கேடாய் முடிந்தது என்று வருந்தி, கோயிலுக்குச் சென்று பாவசங்கீர்த்தனம் செய்து பாவ மன்னிப்புப் பெற விரும்பினாள்.

பகையின் காரணமாக, தன் பக்கத்துவீட்டுப் பெண்ணின் பெயரைக் கெடுத்து அவளின் திருமணத்தை தடைசெய்ததை பாவசங்கீர்த்தனத்தில் குருவிடம் கூறி வருந்தினார், மன்னிக்கச் சொல்லி மன்றாடினார்.

அப்போது அந்தக் குருவானவர், ஒரு பை நிறைய கோழி இறகுகளைக் கொடுத்து அந்த ஊரிலுள்ள வீதிகளில், ஊரைச் சுற்றி ஒவ்வொரு கோழியிறகையும் வீசிவிட்டு வா, என்று சொன்னார்.

அவரும் நாள் முழுவதும் ஊரிலுள்ள அனைத்து வீதிகளிலும் கோழியிறகுகளை வீசிவிட்டு வந்து குருவானவரிடம், தந்தையே நீங்கள் சொன்னபடி செய்துவிட்டேன் என்றார். அதற்கு அந்த குரு, சரிம்மா, இப்பபோய் அந்த கோழி இறகுகள் அனைத்தையும் பொறிக்கி எடுத்துட்டு வாம்மா என்றார். அதற்கு, அந்த அம்மா ஐயோ, சாமி, அதையெல்லாம் எப்படி சேகரிச்சுட்டு வரமுடியும், என்றார். நீ போய் எடுத்துட்டு வாம்மா என்று குரு கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அந்தப் பெண் இரண்டு மூன்று நாள் அந்த ஊர் முழுவதும் சுற்றி அலைந்து ஒரு கைப்பிடி அளவு கோழியிறகுகளை மட்டுமே சேகரிக்க முடிந்தது. அதைக் கொண்டு வந்து குருவிடம் காண்பித்தார்.

அப்போ அந்த குரு, ஒருவரைப் பற்றிய தவறான கருத்துக்களை பரப்புவது சுலபம், ஆனால், அதன் விளைவுகளை தவிர்ப்பது மிகமிகக் கடினம். ஒருவர் இழந்த நற்பெயரை யாராலும் அவருக்குத் திரும்பக் கொடுக்க முடியாது.

பொய் ஊர் உலகமெல்லாம் சுற்றி கெடுக்கும். ஆனால், நீ அந்தக் குடும்பத்துக்கு செய்த கொடுமையை நீதான் சரி செய்ய வேண்டும். அதுதான் நீ செய்த பாவத்திற்குப் பரிகாரம் என்று சொன்னார்.

அந்தப் பெண், பக்கத்து வீட்டிற்கு தனது குடும்பத்தோடு சென்று அவர்களின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார். மேலும், அந்தப் பெண்ணைத் தன் மகனுக்குப் பெண் கேட்டார். அவர்களும் சம்மதம் தெரிவித்து அவர்களின் பகைக்கு முற்றுகையும் இட்டார்கள். இரண்டு குடும்பங்களும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

மன்னிப்பைப் போன்று வலிமையான சமாதான ஆயுதம் இல்லை. மன்னிப்பு ஏற்கப்படுவதும், ஏற்கப்படாததும் வேறு. ஆனால் மன்னிப்புதான் கல்வாரிப் பாடம்.

அதுதான் இயேசு போதித்த இறுதிப் போதனை.



# விவிலியம் அறிவோம் - 57



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மோசேயின் அழைப்பு

மோசே இரண்டுமுறை கடவுளால் அழைக்கப்படுவதாக விடுதலைப் பயணம் நூல் பதிவுசெய்கிறது. இதில் முக்கியமானதாகக் கருதப்படும் முதல் அழைப்பு கடவுளின் மலையாகிய ஒரேபு மலையில் மோசே தன் மாமனா இத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது வருகிறது (விப 2:23-4:17). இப்பகுதி யாவே மரபு மற்றும் ஏலோகீம் மரபுகளிலிருந்து வரும் பாடங்களை உள்ளடக்கமாகக் கொண்டது. அறிஞர்களின் கருத்துப்படி இப்பகுதி விவிலியத்தில் காணப்படும் ஏனைய தலைவர்களைப்போல மோசேயும் கடவுளால் அழைக்கப்பட்டு அவரது பணிக்காக அனுப்பப்பட்டவர் என்பதைக் கூறும் முகமாக எழுதப்பட்டுள்ளது. மோசேயின் விடுதலைப் பணி அவராகவே எடுத்துக்கொண்ட ஒன்றல்ல மாறாககடவுளின் அழைத்தலுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் செய்கின்ற பணியாகும். விவிலியத்தில் பல்வேறு அழைத்தல் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவையனைத்தும் ஒருதனிப்பட்ட இலக்கிய வகையைச் சார்ந்தவை. அவை நிலையானஒருகட்டமைப்பைக் கொண்டவையாக காணப்படுகின்றன. பெரும்பாலான அழைத்தல் நிகழ்வுகளில் நான்கு முக்கியமானக் கூறுகள் காணக்கிடக்கின்றன. அவைமுறையே: 1) இறையனுபவம் 2) தயக்கம் 3) உறுதியளித்தல் 4) மறைப்பணி. இந்தக் கூறுகளையும் மோசேயின் அழைத்தலில் இந்தக் கூறுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் சுருக்கமாகக் காண்போம்.

அழைத்தல் இலக்கியத்தின் முதல் கூறாக வருவது இறையனுபவம். அழைக்கும் கடவுள் முதல் முயற்சியை எடுக்கிறார். இந்த முயற்சி அழைக்கப்படுபவருக்கு ஒரு இறையனுபவத்தைக் கொடுப்பதாக உள்ளது. இந்த இறையனுபவம் உள் மனத்தூண்டலினால் உருவாகின்ற ஒன்றாக



இருக்கலாம்; அல்லது ஒரு சமூகச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டதாக இருக்கலாம். உதாரணமாக, மோசேயின் அழைப்புக்குக் காரணமாயிருப்பது தன் சகோதர சகோதரிகளுடைய ஒடுக்கப்பட்ட நிலைமை. இறைவாக்கினர் எரேமியாவின் அழைப்பு அந்நியரின் படையெடுப்பு ஆபத்து இருக்கும்போது நிகழ்கிறது. இறைவாக்கினர் ஆமோஸ் சமூக அநீதிகள் மலிந்த நேரத்தில் அழைக்கப்படுகின்றார். ஏனைய இறைவாக்கினர்களும் இதைப்போலத்தான். ஒவ்வொரு அழைத்தலின் பின்னணியாக ஒரு சமூகச் சூழ்நிலையைப் பார்க்கிறோம். கடவுள் அந்தச் சூழ்நிலையில் செயல்பட விரும்புகின்றார்; அந்த விருப்பத்தை அழைக்கப்பட்டவர்கள் வழியாக செயல்படுத்துகின்றார். மோசேயின் அழைத்தலைப் பார்க்கும்போது நீத 6வது பிரிவில் காணப்படும் கிதியோனின் அழைத்தலுக்கு ஒத்ததாக உள்ளது எனலாம். கிதியோனின் அழைப்பு அவர் நீதித்தலைவர்,விடுதலை பெற்றுத்தரும் மீட்பர் என்ற

கோணத்திலே உள்ளது. மோசேயும் ஒரு நீதிபதியாக, அடிமைத்தனத்திலே உழலும் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தரும் மீட்பராக அழைக்கப்படுகின்றார்.

மோசேயின் அழைப்பும் ஒரு இறையனுபவத்துடன் தொடங்குகிறது. எரியும் முட்புதரிலிருந்து கடவுள் அவரை அழைக்கிறார். தொடர்ந்து மோசேயுடன் உரையாடுகையில் அழைக்கப்படுவதன் நோக்கத்தை அவருக்குக் கூறுகிறார். ஆண்டவர் கூறுகின்ற வார்த்தைகள் சிந்திக்கத் தக்கவை. எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்த தோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன் எனவே இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன் என்கிறார். ஆண்டர் மோசேயை அழைப்பதன் நோக்கத்தைத் தெளிவாகக் கூறிவிட்டார். எகிப்தில் அடிமைகளாக, துன்புறுத்தப்பட்டவர்களாக வாழுகின்ற இஸ்ரயேல் மக்களை விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்லவேண்டும். ஆண்டவரின் பிரதிநிதியாக அவர் எகிப்து செல்லவேண்டும். ஆண்டரின் அழைப்பை மோசே ஏற்றுக்கொள்வாரா? எகிப்திலிருந்து தப்பியோடி வந்த அவர் மீண்டும் எகிப்து செல்லவிரும்புவாரா? மோசே தயங்குகிறார். பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்? என ஆண்டவரிடம் கேட்டு விவாதிக்கிறார்.

அழைத்தல் இலக்கியத்தின் இரண்டாவது கூறாக வருவது இந்தத் தயக்கம். தயக்கம் பெரும்பாலும் அழைக்கப்பட்டவர்கள் தங்களுடைய தகுதியின்மையை உணர்வதனால் எழுகின்றது. எசாயா இறைவாக்கினர் ஆண்டவராகிய அரசரைக் கண்களால் கண்டதால் அச்சம் கொள்கிறார். ஐயோ! நான் அழிந்தேன் என்று அலறுகிறாக்ஷி (எசாயா 6:5) இறைவாக்கினர் எரேமியா நான் சிறுபிள்ளை, எனக்குப் பேசத்தெரியாது எனக் காரணம் கூறுகிறார் (எரேமி 1:6), இறைவாக்கினர் யோனா ஆண்டவரிடமிருந்து விலகி ஓட முயற்சிக்கிறார். அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சவுலும் முதலில் தயக்கம் காட்டுகிறார் (1 சாமு 10:18-21). புதியஏற்பாட்டில் வரும்போது பேதுருதான் அழைக்கப்பட்டபோது ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னைவிட்டுப் போய்விடும் (லூக்கா 5:8) என்கிறார். மோசேதான் அழைக்கப்பட்டபோதும் பல காரணங்களைக் கூறி அழைப்பை ஏற்கத் தயக்கம் காட்டுகிறார் (விப 3-4). முதலில் பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்? எனக்கேட்கின்றார். அதன்பின் நடக்கின்ற நீண்ட உரையாடலில் தனது தயக்கத்தை இன்னும் வலுவாக வெளிப்படுத்துகின்றார். அவர்கள் என்னை நம்பமாட்டார்கள்; என் பேச்சைக் கேட்கவும் மாட்டார்கள். ஏனெனில் ஆண்டவர் உனக்குக் காட்சியளிக்கவில்லை என்று சொல்வார்கள் (விப 4:1) என்று தட்டிக் கழிக்கப் பார்க்கின்றார். மேலும், ஆண்டவரே! நீர் உமது அடியானிடம் பேசுவதற்கும் முன்போ, பேசிய பின்போ, நாவன்மை அற்றவன் நான்! ஏனெனில், எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும் (விப 4:10) எனக் கூறுகின்றார். இறுதியாக நான் இந்தப் பணியைச் செய்வதற்குத் தகுதியில்லாதவன். தகுதியுடைய வேறொருவனை நீர் இப்போதே அனுப்பிவைப்பீராக (விப 4:13) எனக் கூறி கடவுள் கோபப்படும் அளவுக்குத் தயக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

ஆண்டவர் மோசேயை விடுவதாக இல்லை. பல உறுதிமொழி வாக்குறுதிகளைத் தருகிறார். சில வாக்குறுதிகளுக்கு அடையாளங்களையும் தருகிறார். அழைத்தல் இலக்கியத்தில் மூன்றாவது கூறாக வருவது இந்த உறுதியளித்தல். அழைக்கப்பட்டவர்கள் அழைப்பை ஏற்பதற்குத் தயக்கம் காட்டும்போது கடவுள் அவர்களுக்கு உறுதியளிக்கிறார்; நம்பிக்கையூட்டுகிறார். தான் அவர்களுடன் இருந்து செயல்படுவதாக வாக்களிக்கிறார். சில நேரங்களில் அடையாளங்கள் தந்து அவர்களுக்கு வலுவுட்டுகிறார். சில நேரங்களில் அழைத்தலும் அனுப்புதலும் வெளியடையாளம் ஒன்றோடு இணைந்து வருகிறது. அந்த அடையாளம் அழைத்தலை உறுதிப்படுத்துகிறது. நீதித் தலைவரான கிதியோனின் அழைப்பில் இது தெரிகிறது (நீத 6:36-38, 40). மோசேயின் அழைப்பிலும் (விப 3:12) இந்தக்கூறுகள் இருப்பதைப் பார்க்கிறோம். இஸ்ரயேல் மக்கள் மோசேயை நம்புவதற்கு ஆண்டவர் தனது பெயரை வெளிப்படுத்துகின்றார். தனது பெயரைக் கூறினால் அவரை நம்புவார்கள் எனக் கூறுகின்றார். மேலும் பார்வோன் அவர்களை அனுப்பாமல்


அடம்பிடிக்கும்போது அரும் செயல்களால் எகிப்தைத் தண்டித்து இஸ்ரயேல் மக்களை வெளியே கூட்டி வருவேன் எனக் கூறுகின்றார். மோசே இன்னும் தயக்கம் காட்டுவதைக் கண்ட ஆண்டவர் மேலும் சில அடையாளங்களைத் தருகிறார்.

முதலாவது மோசேயின் கையில் இருக்கும் கோல் ஒரு மந்திரக்கோல் போல ஒரு பாம்பாக மாறுகிறது.அவர் கையை நீட்டி அதைத் தூக்கியபோது மீண்டும் கோலாகிறது. இரண்டாவது, அவரது மடிக்குள் போடுகின்ற கை தொழுநோய் கண்ட கையாக மாறுகிறது. அதை மீண்டும் மடிக்குள் இட்டபோது கை முன்புபோல் மாறுகிறது. மூன்றாவதாக, நைல் நதி நீரை முகந்து கட்டாந்தரையில் ஊற்ற அது இரத்தாமாக மாறுகிறது. இந்த அடையாளங்கள் பார்வோன் மோசேயை நம்புவதற்கும், இஸ்ரயேல் மக்கள் மோசே கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதை நம்புவதற்கும், சிறப்பாக மோசேயின் தயக்கம் நீங்கி கடவுளின் பணியை ஏற்பதற்கும் கொடுக்கப்பட்டவை. ஆனால் மோசேயின் மனம் இவைகளால் மாறவில்லை. தொடர்ந்து தனது தயக்கத்தை வெளிப்படுத்துகிறார். நான் நாவன்மை அற்றவன்; திக்குவாயன் எனக்கூறி அந்தப் பணியிலிருந்து தன்னை விடுவிக்கக் கூறுகிறார். ஆண்டவர் அவரது வல்லமையைக் கூறி, நானே உன் நாவில் இருப்பேன்; நீ பேசவேண்டியதை உனக்குக் கற்பிப்பேன் என உறுதியளிக்கிறார். மோசேயின் தயக்கம் தொடர்கிறது. வேண்டாம், ஆண்டவரே! தகுதியுடைய வேறொருவனை நீர் இப்போதே அனுப்பிவைப்பீராக! என்று ஆண்டவரிடம் கேட்கின்றார். பல்வேறு வழிகளில் உறுதியளித்தும் மோசே தயங்குவதைக் கண்டு ஆண்டவர் மோசேமீது சினம் கொள்கிறார்.

ஆண்டவர் தனது திட்டத்தில் உறுதியாக இருக்கிறார். மோசே வழியாக இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வரவேண்டும் என்ற அவரது திட்டத்தில் மோசேயின் தயக்கம் எந்த மாற்றத்தையும் செய்ய முடியவில்லை. கடவுள் மோசே மீது சினம் கொண்டாலும் அவரை வலுப்படுத்தும் விதத்தில் அவரது சகோதரனை உதவிக்காகக் கொடுக்கிறார். அதைத் தெளிவுடனும் உறுதியுடனும் கூறுகிறார். லேவியனான ஆரோன் உனக்குச் சகோதரன் அல்லவா? அவன் நாவன்மை உடையவன் என்று எனக்குத் தெரியும். இதோ அவன் உன்னைச் சந்திப்பதற்காக வந்து கொண்டிருக்கிறான். அவன் உன்னைக் காணும்போது மனமகிழ்வான். நீஅவனிடம் பேசி, இவ்வார்த்தைகளை அவன் வாயில் வைப்பாய். நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்துகொண்டு நீங்கள் செய்யவேண்டியவற்றை உங்களுக்கு அறிவுறுத்துவேன். உனக்குப் பதிலாக மக்களிடம் அவன் பேசுவதால், அவன் உனக்கு வாயாக இருப்பான். நீயோ அவனுக்குக் கடவுள் போல் இருப்பாய் என ஆண்டவர் மோசேயிடம் கூறுகின்றார். மோசே இனி கூறுவதற்கு எதுவுமில்லை. ஆண்டவரின் பணியை அவர் இனிச் செய்யவேண்டும். மேலும் ஆண்டவர் மோசேயிடம், இந்தக் கோலைக் கையில் எடுத்துச் செல்வாய். இதைக் கொண்டு நீ அருஞ்செயல்கள் ஆற்றுவாய்! என்றும் கூறி அனுப்புகின்றார். மோசேயின் கையிலுள்ள கோல் ஆண்டவர் அவருக்குக் கொடுத்த அதிகாரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. அந்தக் கோலின் உதவியுடன் செய்யப்படும் அரும் செயல்கள் அவர் ஆண்டவரால் அனுப்பப்பட்டவர் என்பதை மக்கள் நம்புவதற்கு உதவியாக இருக்கும்.

மோசே ஆண்டவருடைய அழைப்பை ஏற்கிறார். அழைத்தல் இலக்கியத்தில் அழைப்பை ஏற்று பணியைச் செய்வதற்காகச் செல்வது ஒரு முக்கியமான கூறு. அழைக்கப்படுபவர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பணிக்காகவே அழைக்கப்படுகின்றனர். பணியின்றி அழைப்பு இல்லை. பணியை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, பணியை நிறைவேற்றுவதற்கான உதவிகள் அளிக்கப்படுகின்றன. மோசேயின் வாழ்விலும் எரேமியாவின் வாழ்விலும் இது தெளிவாகத் தெரிகிறது. பல நேரங்களில் மனிதப் பார்வையில் கொடுக்கப்பட்ட பணி நிறைவேறாமல் தோல்வியைத் தழுவுவதுபோல உள்ளது. உதாரணமாக, வாக்களிக்கப்பட்ட நாட்டை அடையுமுன் நெபோ மலையில் மோசே இறக்கிறார்; அரசனான சவுல் கில்போவா மலையில் பெலிஸ்தியர்களின் கையில் பரிதாபமாக இறக்கிறார்; இறைவாக்கினர் எரேமியா எருசலேமின் அழிவைக் காண்கிறார்; இயேசு கல்வாரி மலையில் சிலுவை மரத்தில் உயிர் துறக்கிறார். இந்த நிகழ்வுகள் எல்லாம் கடவுளின் திட்டம் நிறைவேறாததைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. பல மனிதர்கள் விடியலை அறிவிக்க அழைக்கப்படுகிறார்கள்; ஆனால் விடிவதற்கு முன்னே அவர்கள் மறைந்து போகிறார்கள். ஆனால் தொடரும் வரலாற்றைப் பார்க்கும்போது கடவுள் எப்போதும் வெற்றிகொள்கிறார்; அவரது திட்டம் எப்போதும் தோல்வியைத் தழுவுவதில்லை.

பயணம் தொடரும்...



ஞாயிறு

# மறையுரை

## பொதுக்காலம் 26-ம் ஞாயிறு

25-09-2022

முதல் வாசகம் - ஆமோஸ் 6:1, 4-7
இரண்டாம் வாசகம் - 1 தீமொத்தேயு 6:11-16
நற்செய்தி வாசகம் - லூக்கா 16:19-31


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**
பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்,
பெருந்துறை, கோயமுத்தூர்.




# செல்வமும் செல்வாக்கும்

ஞானி ஃபரீத் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அந்த கிராமத்து மக்களுக்கு ஞானம் என்பது பற்றியும், ஞானிகளைப் பற்றியும் தெரியாது. சொல்லப்போனால் அதுபற்றிய அக்கறைகூட அவர்களுக்கு இருந்தது இல்லை. ஒன்றைப்பற்றிய அறிமுகமே நமக்கு ஏற்பட வழி இல்லை என்ற நிலையில் அதுபற்றிய உயர்ந்த கருத்தும் நமக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனால் எங்கிருந்தோ பெரிய பெரிய மனிதர்கள் அவரை வந்து சந்திப்பதையும், அடிபணிவதையும் கண்டபோது, அந்த இடத்தைச் சுற்றியிருந்த எளிய கிராம வாசகள், அவர் ஏதோ பெரியவர் என்பதை மட்டும் உணர்ந்திருந்தனர். அவர்களது வியப்பை அதிகப்படுத்தும்படியான வேறொரு சம்பவமும் அங்கே நடந்தது. ஒருநாள் யாத்திரிகர்கள் இருவர் வந்து, ஃபரீத்துடன் பேசிவிட்டுப் போனார்கள். பிற்பாடுதான் தெரிந்தது, அவர்கள் இருவரும் மாறுவேடத்தில் வந்தவர்கள் என்பதும். அதில் ஒருவர் சக்கரவர்த்தி அக்பர் என்பதும் , அவருடன் வந்த மற்றொருவர் பீர்பாலாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. முகலாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியே வந்து காணும் அளவுக்கு அப்படி என்ன சிறப்பு இருக்கிறது அவரிடம்? அக்பரைப் பொறுத்தவரை அவர் தீராத தேடல் வேட்கை கொண்டவர். ஆற்றல் எங்கிருந்தாலும் சரி அது இசையோ, நாட்டியமோ, சங்கீதமோ எதுவாயினும் சரி, உடனே அது இருக்குமிடம் தேடிக் கிளம்பிவிடுவார். தான் மன்னன் என்று அறிந்தால், அவர்கள் இயல்பாய் இருக்க முடியாது என்பதால், சாதாரண வழிப்போக்கர்களைப் போல மாறுவேடமணிந்து கொண்டு சென்று அவர்களது திறனை கண்டுகளிப்பார். அந்த வகையில் ஞானி ஃபரீத் பற்றி பலரும் கூறவே, எளிமையான உடையில் இயல்பாக வந்து அவரைக் கண்டு வணங்கினார் மன்னர். பின்னர், சந்தர்ப்பம் கிடைக்கும் சமயங்களில் எல்லாம் வந்து அவரை சந்தித்தார். அக்பரே நேரில் வந்து கண்டு வணங்குவதால் ஊரார் அவரைப் பெரிதும் கொண்டாடினர். மக்கள் ஒருநாள் இவரைச் சந்தித்து பேரரசர் அக்பர் உங்களிடம் அடிக்கடி வருகிறாரே, நம் கிராமத்து ஏழை மக்களுக்கு நல்ல வசதிகள் செய்து தரக்கூடாதா? என்றனர்.

ஆஹா, அவசியம் செய்கிறேன் என்று கூறி அன்றே டெல்லிக்கு புறப்பட்டார். அந்த சூஃபி ஞானி. டெல்லியில் அவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அக்பர் தொழுகையில் இருந்தார். ஞானி நேராகப்போய் அக்பரின் பின்னால் நின்றார். அதனால் அவர் சொல்லிக் கொண்டிருந்த செபம் தெளிவாகக் கேட்டது.

கருணை உள்ள இறைவனே, இன்னமும் நிறைய செல்வத்தை என்மீது பொழிவீராக. இன்னமும் பெரிய ராஜ்யத்தை எனக்கு அனிப்பீராக, மேலும் ஆரோக்கியத்தை அளிப்பீராக...


ஃபரீத் அந்தக் கனமே அந்த இடத்தைவிட்டு நகர ஆரம்பித்தார். அந்த சமயம் பிரார்த்தனையை முடித்த அக்பரும், வியப்பும் மகிழ்ச்சியுமாக ஓடோடிச் சென்று அவரை வணங்கினார். எதற்காக என்னைத் தேடி வந்தீர்கள்? ஏன் ஒன்றும் சொல்லாமல் திரும்பிச் செல்கிறீர்கள்? என்று கேட்டார் அக்பர். ஃபரீத் சொன்னார், நீ செல்வந்தன் என்று நினைத்து உன்னிடம் ஏழைகளுக்கென்று சில உதவிகளைக் கேட்கலாம் என்று வந்தேன். உன் செபத்தைக் கேட்டபிறகு, நீயும் ஒரு ஏழைதான் என்பதை அறிந்து கொண்டேன். உனக்கே இன்னும் பொருள் தேவைப்படுவதால், என் கிராமத்துப் மக்களிடம் வசூலித்து அனுப்பி வைக்கிறேன். கிராமத்து மக்களின் கோரிக்கைகளை, நீயே எந்தக் கடவுளிடம் கேட்கிறாயோ, அவரிடமே நான் கேட்டுக் கொள்கிறேன்.

முகலாய மன்னர் அக்பர் தன்னுடைய சுயசரிதையில் இந்தக் கதையைச் செல்லியிருக்கிறார். என் வாழ்நாளிலேயே முதல் முறையாக நான் செல்வந்தன் அல்ல என்பதை அந்த கனத்தில் புரிந்து கொண்டேன் என்று பதிவு செய்திருக்கிறார்.

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, இன்றைய இறைவார்த்தை வழிபாடு அழிந்து போகின்ற செல்வத்தைப் பற்றியும், அழிந்துபோகின்ற செல்வர்களைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. முதல் வாசகத்தில் இறைவாக்கினர் ஆமோஸ் பணக்காரர்கள் எப்படியெல்லாம் ஏழைகளை திட்டமிட்டு கொள்ளையடிக்கின்றனர் என்பதையும், கடவுள் ஏழைகள் சார்பாக நின்று பணக்காரர்களை தண்டிப்பார் என்பதையும் எடுத்துக்கூறி, நம் வாழ்விலே தெய்வங்களாக வழிபடும் பணம், பதவி, பெண், மண், பொன் முதலியவற்றை நாம் அகற்றி, முழு இதயத்தோடும், ஆன்மாவோடும் இறைவன் ஒருவர் மட்டுமே நமக்கு எல்லாம் என்று அவரை மட்டுமே தேட வேண்டும் என்று கூறுகிறது.

இரண்டாம் வாசகத்திலே, விசுவாசம் பெறும் சொற்களோடு அமையக்கூடாது, செயல்களாக மலரவேண்டும் என்று எடுத்துக்கூறுகிறது. நற்செய்தி வாசகத்தில் நம்முடைய செல்வம், செல்வாக்கு இவைகளை மட்டும் நம்பிக்கொண்டு ஏழைகளைப் புறக்கணித்தால், இறைவன் நம்மைப் புறக்கணித்து விடுவார் என்ற எச்சரிக்கை தரப்படுகிறது. எனவே, நம்முடைய செல்வமும், செல்வாக்கும் உறவுகளைப் பலப்படுத்த உதவவேண்டும் ஒழிய, மற்றவர்களை பலவீனப்படுத்த பயன்படுத்தக் கூடாது.

ஆமென்.



# பொதுக்காலத்தின் 26-ம் ஞாயிறு

ஆமோஸ். 6:1,3-7, 1 தீமோ. 6 : 11-18. லூக். 16:19-31

**25-09-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

பொருள் ஆசையிலிருந்து விடுபட்டு நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மனவுறுதி, பணிவு ஆகியவற்றை கைக்கொண்டு விசுவாச வாழ்வு வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 26-ஆம் ஞஸயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

துன்பம் வந்த பின்பு அதற்கான பரிகார முயற்சியில் மும்முரமாய் மூழ்குவதைவிட நன்றாயிருக்கும் போதே பரிகார செயல்பாடுகளை வாழ்வியலாய் அமைத்துக்கொள்ள இன்றைய திருப்பலி நம்மை அழைக்கிறது.

பாவம் செய்வதால் மட்டும் ஒருவர் பாவியாவதில்லை. நன்மை செய்யத் தவறினாலும் அவர் பாவியாகிறார். அவர் விண்ணக வாழ்வைத் தவற விடுகிறார். காலம் கடந்த யோசனைக்கும் செயலுக்கும் எந்த ஒரு பயனும் இல்லை என்ற கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளது இன்றைய இறைவழிபாடு.

தன்னருகில் உள்ள சக மனிதர் வாழ்வில் அக்கறையின்றி சுய நலத்தோடு வாழ்வோரின் செல்வச் செருக்கும், செல்வமே நிலையானது என்ற இறுமாப்புடன் வாழ்வோரின் நிலை பாடும் தவறு என்றும், இப்படிப்பட்டவர்கள் கடவுளின் கடும் கோபத்துக்கு ஆளாவர் என்பதையும் எடுத்துரைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

ஆண்டவர் பசித்திருப்போருக்கு உணவளிக்கிறார். சிறை பட்டோருக்கு விடுதலை அளிக்கிறார். அனாதை பிள்ளைகளையும், கைம்பெண்களை யும் ஆதரிக்கிறார். அப்படியென்றால் கடவுள் எப்போதுமே ஏழைகள் பக்கமே இருக்கின்றார். கடவுள் எப்போதுமே ஏழைகள் பக்கமே இருக்கின்றார் என்றால் நாம் யார் பக்கம் என்பது குறித்து இன்றைய திருப்பலி வழியாக சிந்திப்போம்.

கடவுளன்பு பிறரன்பு வழியாகவே எண்பிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து பிறருக்கு உதவுகின்ற நல்ல மனப்பான்மையையும், இருப்பதை பகிர்ந்து கொள்கின்ற உயர்ந்த பண்பையும் எங்களுக்குத் தாரும் என்று இத்திருப்பலி வழியாக இறை யருளை வேண்டுவாம்.

## முதல் வாசக முன்னுரை

பணம்தான் தங்களது வாழ்வின் பலம் என்று கருதியவர்களையும், ஏழை மக்களை புறந்தள்ளிவிட்டு, தங்களது செல்வத்தை நிலையானதாக கருதிய வரையும் இறைவாக்கினர் ஆமோஸ் கடுமையாக சாடுகிறார். செல்வத்தையும், செருக்கையும் நம் நெஞ்சத்திலிருந்து அகற்றி முழு இதயத்தோடும் முழு ஆன்மா வோடும் இறைவன் ஒருவர் மட்டுமே நமக்கு எல்லாம் என்ற உறுதியுடன் இவ்வாசகத்தை கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பவுலடிகள் உரோமை சிறையில் இருந்த தேபாது திமொத்தேயுவுக்கு வழங்கிய அறிவுரையே இன்றைய இரண்டாம் வாசகம். ஆண்டவரில் வாழும் வாழ்க்கை என்பது அன்பு, விசுவாசம் என்ற இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு அமைவதாகும். இவ்விரண்டும் வெறும் சொல் அளவில் அமைந்துவிடாது, செயல் வடிவம் பெற வேண்டும். அதுதான் உயிருள்ள விசுவாச வாழ்க்கை என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அரசருக்கெல்லாம் அரசரும், ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவரு மான அன்பு இறைவா, எம்மை வழி நடத்தும். உம் திரு அவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர் வதியும். நிலை வாழ்வை உறுதியாகப் பற்றிக்கொண்டு, உமக்கு சாட்சியாக வாழ்ந்த தீமோத்தேயுவைப்போல் விசுவாசத்தில் நிலைத்து வாழவும், அந்த விசுவாசப் பாதையில் மக்களை வழி நடத்தவும், அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், நல்ல உடல் ஆரோக்கியத்தையும் நிறைவாக தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, எங்களது வாழ்வில் பொருட்களுக்கும் செல்வத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், சக மனிதர்களுக்கும், அவர்களது உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழவும், இறையன்பானது பிறரன்பு வழியாகவே எண்பிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து பொருளாசையிலிருந்து விடுபட்டு பிறரன்பு வழியாக இறையன்பை பெறவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) நீதியின் வேந்தனே இறைவா, எம் இந்திய திருநாட்டின் அரசியல் தலைவர் களையும், அதிகாரிகளையும் கனிவுடன் ஆசீர்வதியும். அவர்கள் நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் தங்களது சுயநலத்திற்காய் பயன்பாட்டு பொருளாய் பார்க்காமல், அவர் களுக்குரிய உரிமையையும், நீதி யையும், வளத்தையும் பகிர்ந்தளிக்கும் தலைவர்களாய், மானுடத்தை வாழ்விக்கக் கூடியவர்களாய் நலத் திட்டங்களை வகுத்து பொறுப்புடன் செயல்பட, அவர்களுக்கு நல்ல அறிவையும் ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) வாழ்வு தரும் வார்த்தைகளை வழங்கும் வல்ல தேவனே, இத்திருப்பலி வழியாக நீர் வழங்கிய அருள் வாக்குகளை எம் நெஞ்சிலே ஏற்று, அதை வாழ்வாக்கி, எம் அருகில் வாழும். உதவியின்றி வாடும் எத்தனை யோ லாசர்களை கருணையுடன் கண் நோக்கும் மன நிலையை நாங்கள் பெற்று அன்பு, இரக்கம், கருணை கொண்டோராய் நாங்கள் வாழ்ந்திட உமது வார்த்தையாலும், விருந்தாலும் எங்களுக்கு நல்வழி காட்டிட வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**நாலும் ஆறும் நயந்திடாப்
பால னிப்பரு வத்துனைச்
சால வேதொழ நீயருள்
மூல காரண மூர்த்தியே**

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் தோன்றி நிலைபெறக் காரணமாக இருக்கின்றவரே! பத்து வயதே நிரம்பிய சிறுவனாகிய நான் உம்மை வணங்குவதற் குரிய மனநிலையினையும் உம் நிறைவான அருளையும் நீரே தந்தருள வேண்டும்.



# வத்திக்கான் செய்திகள்

சீனாவில் உள்ள கத்தோலிக்க மறைமாவட்டங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு ஆயர்கள் இல்லை. அவ்வாறு ஆயர்களைத் தேர்வு செய்வதிலும், அவர்களை அங்கீகரிப்பதிலும் உள்ள நடவடிக்கைகளைக் குறித்த ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்க வத்திக்கான் அதிகாரிகள் சீனாவில் பெய்ஜிங்கில் கூடியுள்ளார்கள். வத்திக்கான் பெய்ஜிங்குடன் 2018ல் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதை 2020 ல் புதுப்பிக்கப்பட்டது. வரும் 2022 அக்டோபர் மாதத்தில் நடைபெறப்போகும் கம்யூனிட்டி கட்சியின் 20வது காங்கிரஸுக்கு முன்பாக அந்த ஒப்பந்தத்தை புதுப்பிக்க சீன அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மறைக்கல்வி ஒரு பள்ளியில் நடக்கும் ஒருமணிநேர வகுப்பு அனுபவமாக இல்லாமல், அது ஒரு விசுவாச வாழ்க்கை அனுபவமாக இருக்க வேண்டும். அது அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் நம்பிக்கை வாழ்வாக இருக்க வேண்டும். மனிதருக்கிடையே உள்ள அன்பான உறவின் மூலமாகத்தான், நம்பிக்கை வளரும்.

வத்திக்கானில் 1936ல் போன்டிபிக்கல் அகாடமி ஆப் சயின்ஸ் உருவாக்கப்பட்டது. செப்டம்பர் 10ம் தேதியன்று பாப்பரசர் அங்கு உரையாற்றினார். அதில் கத்தோலிக்கரல்லாதவர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். சமீபமாக நடைபெறும் நிகழ்வுகள், வரலாறு பின்நோக்கிச் செல்வதுபோல் உள்ளது. வன்முறை அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றது. அறிவியல் வன்முறை வளர்க்கும் களமாக இல்லாமல், சமாதனத்தின் விளைநிலமாக இருக்க வேண்டும் என்று பாப்பரசர் அறிவுறுத்தியுள்ளார்.

2023ல் லிஸ்பனில் நடைபெறவுள்ள உலக இளையோர் தினத்திற்கு ஆயத்தமாக போப் பிரான்சிஸ் தனது 3வது செய்தியை வெளியிட்டுள்ளார். அதில் இரட்சிப்பின் செய்தியை பரப்புவதற்காக அன்னை மரியாள் தனது உறவினர் எலிசபெத்திடம் விரைந்து சென்றதுபோல் பிறருக்கு உதவி செய்ய விரைந்து செல்ல வேண்டும், நமது அன்பு மேலோட்டமாக இருப்பதும், எதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்வதும் அன்பு வாழ்வுக்கு முரணானது.

உலக இளையோர் தினம் 2022ல் கொண்டாடத் திட்டமிடப்பட்டிருந்தது ஆனால் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக அது 2023ம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் 6 வரை நடைபெற திட்டம் மாற்றப்பட்டுள்ளது.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



அதிகாரம் 2
**வான்சிறப்பு**
**குறள் – 12**

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை**

## குறள் விளக்கம்

உண்பவனுக்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோருக்கத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

## சிந்தனை

மழை நீரானது உயிரளிக்கும் ஊற்றாக இருந்து இந்த உலகை செழிப்படையச் செய்கிறது. உயிர் வாழ்வுக்கு ஆதாரமாகவும் இருக்கிறது. அதுபோல் இன்னும் பல தாவரங்களும், விலங்குகளும், மனிதர்களும் தன்னை முழுவதும் பிறருக்கு வழங்கி உயிர்களை வாழ வைக்கின்றன. நமது பிறப்பும் பிறருக்கு பயன்படும் விதமாக அமைய வேண்டும்.

சோம்பேறியான ஒருவன் திருட்டுத் தொழில் செய்து அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தினான். ஒருநாள் காட்டில் அவன் ஒரு நரியைக் கண்டான். அந்த நரிக்கு 2 கால்கள் மட்டுமே இருந்தது. ஆனாலும் அந்த நரி மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தது. இந்த சோம்பேறி மனிதனுக்கோ அது ஆச்சர்யத்தை அளித்தது. இந்நிலையில் இந்த நரி எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும். அது எப்படி தன் உணவைப் பெற்றுக் கொள்ளும். மற்ற விலங்குகளிடமிருந்து அது எப்படி தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என எண்ணிக் கொண்டிருக்கும் போதே சிங்கம் ஒன்று வாயில் இறைச்சித் துண்டுடன் நரியின் அருகில் வருவதைக் கண்டான். சிங்கத்தைக் கண்ட எல்லா விலங்குகளும் ஓடிவிட்டன. சோம்பேறி மனிதனும் மரத்தில் ஏறிக்கொண்டான். நரி மட்டும் ஓடாமல் அங்கேயே இருந்தது. அருகில் வந்த சிங்கம் அந்த இறைச்சித் துண்டை நரியிடம் கொடுத்தது. நரிக்கு உணவு கிடைத்த விதத்தை கண்ட சோம்பேறி தனக்கும் யாராவது உணவு கொண்டு வருவர் என நினைத்து சாலையின் ஓரத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருந்தான். ஆனால் ஒருவரும் அவனுக்கு உணவு கொடுக்கவில்லை. பின் அங்கு வந்த ஒரு ஞானியைப் பார்த்து நரிக்கு உணவளித்த கடவுள் தனக்கு உணவு தரவில்லை என்று புலம்பினான். அதற்கு ஞானி நீ கடவுளின் திட்டத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை. கடவுள் உன்னை முடமான நரியாக அல்ல: வலிமை உடைய சிங்கமாக படைத்துள்ளார். நீ உழைத்து சம்பாதித்து மற்றவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்றார்.

ஒவ்வொரு மனிதரிலும் ஒரு இறைத்திட்டம் உள்ளது. அதன் நோக்கம் பிறருக்கு நன்மை விளைவிப்பதே ஆகும். உதாரணமாக திருத்தூதர் பணிகள் இயல் 9 இறைவார்த்தை 36 கூறும் யோப்பா நகர் தபித்தா என்னும் இயேசுவின் பெண் சீடரை எடுத்துக் கொள்வோம். நன்மை செய்வதிலும் இரக்க செயல்கள் புரிவதிலும் அவர் முற்றிலும் ஈடுபட்டிருந்தார் . இயேசுவின் சீடர்கள் இவ்விதம் நற்செயல்கள் செய்யும் போது, இயேசு இதற்கும் ஒரு படி மேலே சென்று நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள்: அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என்று லூக்கா நற்செய்தி இயல் 6 இறைவார்த்தை 35ல் தெளிவுபடுத்துகிறார். ஒருமுறை வாழும் இவ்வுன்னத வாழ்வில் அனைவருக்கும் பயன்படும் வகையில் வாழ்வோம்.

மேலும் கடவுளைப் பிறரில் காணவும் நம்மை மையப்படுத்துவதிலிருந்து வெளியேறி பிறர் நலனைக் காக்க நம்மைப் படைத்துள்ள அன்பான இறைவனுக்குத் தகுந்த பதில் தரவும் நற்செய்தி நம்மை அழைக்கிறது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (நற்செய்தியின் மகிழ்ச்சி:39). எனவே நற்செய்தியை ஆழமாக படித்து, நமது சிந்தனையால் நன்மை செய்வோம். நமது சொற்களால் நன்மை செய்வோம். நமது செயல்களால் நன்மை செய்வோம். நற்செயல்கள் ஒரு சங்கிலி தொடர் நிகழ்வாய் இந்த உலகத்தை இணைக்கட்டும்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 26-ம் ஞாயிறு - 25.09.22

**25.09.2022 – ஞாயிற்றுக்கிழமை**

முதல் வாசகம் : ஆமோஸ் 6:1, 4-7
இரண்டாம் வாசகம் : 1 தீமொத்தேயு 6:11-16
நற்செய்தி : லூக்கா : லூக்கா 16:19-31

**26.09.2022 – திங்கட்கிழமை**

**முதல் வாசகம் :** யோபு 1:6-22
**நற்செய்தி :** லூக்கா 9:46-50

**27.09.2022 – செவ்வாய்கிழமை**

முதல் வாசகம் : யோபு 3:1-3, 11-17, 20-23
நற்செய்தி : லூக்கா 9:51-56

**28.09.2022 – புதன்கிழமை**

**முதல் வாசகம் :** யோபு 9:1-12, 14-16
**நற்செய்தி :** லூக்கா 9:57-62

**29.09.2022 – வியாழக்கிழமை**


முதல் வாசகம் : தானியேல் 7:9-10, 13-14 அல்லது
திருவெளிப்பாடு 12:7-12
நற்செய்தி : யோவான் 1:47-51

**30.09.2022 – வெள்ளிக்கிழமை**

**முதல் வாசகம் :** யோபு 38:1. 12-21, 40:3-5
**நற்செய்தி :** லூக்கா 10:13-16

**01.10.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : யோபு 42:1-3, 5-6, 12-17
நற்செய்தி : லூக்கா 10:17-24



“It is impossible to find a saint who did not take the “two P’s” Seriously:

**Prayer** and **Penance.”**

- St. Francis Xavier, SJ



# திருவிவிலியமும் திருக்குறளும்

வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.**

அதிகாரம் 16

பொறையுடைமை

குறள் - 152

**பொருள்:** அளவுகடந்து செய்த தீங்கையும் எப்போதும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதனை நினையாமலே மறந்து விடுதல் அதனினும் நன்மையாகும்.

நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவரும் என் பக்கம் சாய்ந்து எனது மன்றாட்டைக் கேட்டருளினார். திருப்பாடல்கள் 40:1

போதகர் ஒருவர் கூட்டத்தில் இயேசுவின் அன்பை பற்றி போதித்துக்கொண்டிருந்தார். எந்த நிலையிலும் நாம் இருந்தாலும் ஆண்டவரது அன்பு நம்மை பூரணமாக காத்துக் கொண்டிருக்கிறது. நாம் அவர் மீது எப்பொழுதும் அன்புள்ள பிள்ளைகளாக அவருக்கு கீழ்ப்படிந்து உண்மையான சாட்சியாக வாழ வேண்டும் என்று போதித்து கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு முரடன் அவரைப் பார்த்து, 'நீ உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு நல்ல செல்வத்தில் வாழ்ந்து கடவுளைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறாய். உனக்கு இதெல்லாம் பறிபோனால் நீ கடவுளை அன்பு செய்வாயா? அன்பு செய்யதான் உன்னால் முடியுமா?' என்று போதகரிடம் அத்தனை கூட்டத்தின் மத்தியிலும் எழுந்து நின்று கோபமாக கேள்வியை எழுப்பினான். அவரோ பொறுமையாக,' அப்படி நடந்தாலும் நான் உண்மையாக ஆண்டவரை அன்பு செய்வேன்' என்றார்.

மீண்டும் அந்த முரடன் அவரிடம் 'நீ உயிருக்கு உயிராக நேசிக்கும் உன் மனைவி இறந்து விட்டால், உன் பிள்ளைகள் இறந்துவிட்டால் நீ கடவுளை அன்பு செய்ய முடியுமா? நீ இன்று பிரசங்கித்து கொண்டிருப்பது போல கடவுளை உண்மையாக நீ அன்பு செய்து உன் பிரசங்கத்தைத் தொடர்ந்து செய்ய முடியுமா?' அதற்கும் அந்த போதகர் பொறுமையாக, 'அப்படி நீ சொல்வதைப்போல நடந்தாலும் நான் உண்மையாக கடவுளை அன்பு செய்து என் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பேன் என்று கூறினார்'. அதற்கு அந்த முரடன், 'நீ சொல்வதெல்லாம் பொய்; நீயும் பொய்; உன் பிரசங்கமும் பொய்.' என்று சொல்லி அவரை ஏளனம் செய்து விட்டு வெளியேறினான்.

இரண்டு வருடத்தில் போதகரின் மனைவி இறந்துவிட, அவர் இறுதி சடங்கின் போது, ஆண்டவரை நோக்கி நன்றி செலுத்தி 'இத்தனை வருடங்கள் எனக்கு நல்ல துணையாக மனைவியை கொடுத்ததற்கு நன்றி. ஆண்டவரே' எனத் துதித்து ஆண்டவரைத் துதித்துப்பாடி இறுதிச்சடங்கை நிறைவேற்றினார். இதையெல்லாம் கவனித்துக் கொண்டு, கேட்டுக் கொண்டிருந்த அந்த ஒருவன் ஓடிவந்து அவரை கட்டியணைத்து அழுதான். 'ஐயா, என் அன்பு மனைவி, பிள்ளைகளை நான் இழந்து தவித்து இந்த வாழ்க்கையில் தடம்புரண்டு போயிருந்தேன். அதனால் எல்லோரையும் வெறுக்கத் தொடங்கினேன் எனக்குமுரடன் யாரும் இல்லை ; கடவுள் எல்லாம் பொய் என்று நினைத்தேன் ஆனால் இன்று உங்களை கண்டவுடனே எல்லாம்வல்ல கடவுள் இருக்கிறார்; அவர் அன்புதான் நம்மை வாழவைக்கிறது என்பதை உங்கள் வழியாக புரிந்து கொண்டேன்' என்று அன்று கூட்டத்தில் ஏளனப்படுத்திய முரடன்தான் மனம் மாறி அழுதான்.

திருவிவிலியத்தில் அரசன் சவுல் தாவீதைக் கொல்ல தேடியபோது அவர் தப்பி ஓடுகிறார். தாவீதின் மேல் உள்ள கோபத்தால் குருக்கள் 85 பேரையும் கொல்கிறான் அரசன் சவுல். நகர், மலை, பாலைவனம் என ஒவ்வொரு இடத்திலும் தாவீதைத் தேடித் தேடி அலைகிறான். அப்போது ஏன்கேதிப் பாலை நிலத்தில் தாவீது இருப்பதை அறிந்து செல்கிறார். அவ்விடத்தில் தாவீதின் அருகில் அரசன் சவுல் கிடைத்த போதும் அவர் அவரைக் கொல்லாமல் விட்டு விடுகின்றார். தமக்கு துன்பத்தை, அதுவும் சாகும்அளவிற்கு துன்பத்தை தந்த அரசன் சவுலைப் பொறுத்துக்கொண்டு நன்மையே செய்கின்றார் என்பதனை 1சாமுவேல் புத்தகம் இருபத்தி நான்காம் அதிகாரம் முதல் வசனத்திலிருந்து வாசிக்கிறோம்.

சவுல் பெலிஸ்திரைத் தொடர்வதைக் கைவிட்டுத் திரும்பிய போது; 'இதோ ஏன்கேதிப் பாலைநிலத்தில் தாவீது இருக்கிறான் 'என்று தெரிவிக்கப்பட்டது.

சவுல் இஸ்ரயேல் முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் பேருடன் தாவீதையும் அவர்தம் ஆள்களையும் தேடி வரையாடுகளின் பாறைகளுக்கு எதிர்புறம் சென்றார்.

அவர் சென்ற போது வழியோரத்தில் ஆட்டுப் பட்டிகளைக் கண்டார்; அதனருகில் ஒரு குகை இருந்தது. இயற்கைகடன் கழிப்பதற்கு சவுல் அதனுள் சென்றார். அப்பொழுது தாவீதும் அவர்தம் ஆள்களும் அக்குகையின் உட்பகுதியில் இருந்தனர்.

தாவீதின் ஆள்கள் அவரிடம், இதோ! உன் எதிரியை உன்னிடம் ஒப்புவிப்பேன். உன் விருப்பத்திற்கு ஏற்ப அவனுக்குச் செய், என்று ஆண்டவர் சொன்ன நாள் இதுவே! என்றனர். உடனே தாவீது தவழ்ந்து சென்று சவுலின் மேலங்கியின் தொங்கலை அவருக்குத் தெரியாமல் அறுத்தார்.

தாமிது சவுலின் தொங்கலை அறுத்தப்பின் அதற்காக மனம் வருந்தினார். அவர் தம் ஆள்களை பார்த்து, 'ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத்தீங்கும் செய்யாதவாறு ஆண்டவர் என்னைக் காப்பாராக. ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவரானதால் நான் அவர் மேல் கைவைக்கக்கூடாது' என்றார்.

ஆதலின் தம் ஆள்கள் சவுலைத் தாக்காதவாறு தாவீது இவ்வார்த்தைகளால் அவர்களைத் தடைசெய்தார். பின்பு சவுல் எழுந்து குகையை விட்டு தம் வழியே சென்றார். அதன்பின் தாவீதும் எழுந்து குகையிலிருந்து வெளியேறிச் சவுலைப் பின் தொடர்ந்து, 'அரசே, என் தலைவரே! என்று அழைத்தார். சவுல் பின்புறம் திரும்பிய போது தாவீது தரையில் முகம் குப்புற வீழ்ந்து வணங்கினார்.

பின்பு தாவீது சவுலை நோக்கி, 'தாவீது உமக்குத் தீங்கு செய்யத் தேடுகிறான்' என்று சொல்லும் மனிதனின் வார்த்தைகளை நீர் கேட்கலாமா?

இதோ! குகையில் ஆண்டவர் உம்மை என்னிடம் ஒப்புவித்தார் என்பதை இன்று உம் கண்களே கண்டன; உம்மைக் கொல்ல வேண்டுமெனச் சிலர் என்னை வற்புறுத்தினார்கள்; ஆனால் அவர் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பெற்றவர்; என் தலைவருக்கு எதிராக நான் கை ஓங்கக் கூடாது என்று சொல்லி நான்தான் உம்மைக் காப்பாற்றினேன். என் தந்தையே பாரும்! என் கையிலிருக்கும் உம் மேலங்கியின் தொங்கலைப் பாரும். உம்மைக் கொல்லாமல் உம் மேலங்கியின் தொங்கலை மட்டும் அறுத்து எடுத்துள்ள என் செயலைப் பார்த்தாலே என்னிடம் யாதொரு குற்றமோ துரோகமோ இல்லையென்பதை நீர் அறிவீர்! நீர் என் உயிரைப் பறிக்கத் தேடினாலும், உமக்கெதிராக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. உமக்கு எனக்கும் ஆண்டவர் நடுவராய் இருப்பாராக! என்பொருட்டு ஆண்டவரே உமக்கு நீதி வழங்கட்டும்; ஆனால் உமக்கு எதிராக என் கை எழாது. முன்னோரின் வாய்மொழிக்கேற்ப, தீயோரிடமிருந்தே தீமை பிறக்கும்' ஆதலால் உம் மேல் நான் கைவைக்க மாட்டேன்.

இஸ்ரயேலின் அரசர் யாரைத் தேடிப் புறப்பட்டார்? யாரைப் பின் தொடர்கிறீர்? ஒரு செத்த நாயை அன்றோ? ஒரு தெள்ளுப் பூச்சியை அன்றோ? ஆண்டவர் நடுவராயிருந்து உமக்கும் எனக்கும் நீதி வழங்குவாராக! அவரே எனக்காக வழக்காடி உம் கையினின்று என்னை விடுவிப்பாராக! என்றார். தாவீது இவ்வாறு சவுலிடம் பேசி முடித்தப்பின் சவுல், 'என்மகன் தாவீதே! இது உன் குரல்தானா! என்று சொல்லி உரத்த குரலில் அழுதார்.

அவர் தாவீதிடம், 'நீ என்னிலும் நீதிமான். நீ எனக்கு நன்மை செய்தாய்; ஆனால் நானோ உனக்கு தீங்கு செய்தேன். ஆண்டவர் என்னை உன்னிடம் ஒப்புவித்திருந்தும் நீ என்னைக் கொல்லவில்லை. இதனால் நீ எனக்கு நன்மையே செய்து வந்திருப்பதை இன்று நீ வெளிப்படுத்தியிருக்கிறாய். ஏனெனில் ஒருவன் தன் எதிரியைக் கண்ட பின் அவன் நலமுடன் செல்ல அனுமதிப்பானா? இன்று நீ எனக்கு செய்த நன்மைக்கு ஈடாக ஆண்டவரும் உனக்கு நன்மை செய்வாராக!

இதோ, நீ திண்ணமாய் அரசனாவாய் என்றும் இஸ்ரயேலின் அரசை நீ உறுதிப்படுத்துவாய் என்றும் இப்போது நான் அறிகிறேன்.

ஆதலால் எனக்குப் பின்வரும் என் வழிமரபை நீ வேரறுப்பதில்லை என்றும் என் தந்தை வீட்டாரிலிருந்து என் பெயரை அழிக்கமாட்டாய் என்றும் ஆண்டவர் மேல் எனக்கு ஆணையிட்டுக் கூறு' என்றார். அவ்வாறே தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக் கூறினார். பின்னர் சவுல் வீடு திரும்ப, தாவீதும் அவர் தம் ஆள்களும் பாதுகாப்பான இடம் நோக்கிச் சென்றனர். (1 சாமுவேல் 24:1-22)

அளவுகடந்த துன்பம் ஒருவரால் ஏற்பட்டாலும் அதை பொறுத்துக் கொண்டு அதனை மறந்து மன்னித்து விடுவதே நல்லது. திருவள்ளுவர் சொல்லுவது கடினமாக இருந்தாலும் அதையும், அதற்கு மேலானாதையும் செய்கின்றவர்கள் நமது திருவிவிலியத்தில் இருக்கிறார்கள்.

ஆண்டவரைப் பற்றி வாழ்கின்ற ஒவ்வொருவரும் அவ்வாறே இன்றும் இருக்கின்றனர். நாமும் அவர்கள் வழி நடக்க முயற்சிப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**– லீமா விக்டோரியா**